ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2196/2 - 2020 ඔක්තෝබර් මස 05 වැනි සඳුදා - 2020.10.05
2196/2 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) பிரிவின் கீழான கட்டளை

**2020 ஆம் ஆண்டின் 156 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/9/2018/WS/218.
பிர. செ. குறிப்பு இல. : VE/DS/LA/AQ/WS/218.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 29.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், வேலனை.

2. **காணியின் விபரம்**: வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், தீவகத்தின் தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில், J/13, வேலனை வடகிழக்கு கிராம அலுவலர் பிரிவில் வேலனை கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2019.11.22 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சவட்டு வரைபடத்தில் Ja/VLN/2019/22 இல் குறிப்பிடப் பட்டுள்ள காணித் துண்டின் எல்லைகள் :

01 **துண்டு ‘A’ – நொச்சிக்காடு - விஸ்தீரணம் : சுமார் 0.1478 ஹெக்டயார்**

வடக்கு : நொச்சிக்காடு இலங்கை மின்சார சபை, தீதன்கூடல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மற்றும் தீதன்கூடல் ரத்னசபாபதி மற்றும் இன்னும் சிலர் ; கிழக்கு: தீதன்கூடல் ரத்னசபாபதி மற்றும் இன்னும் சிலர் தீதன்கூடல், அரசு ; தெற்கு: தீதன்கூடல் ரத்னசபாபதி மற்றும் இன்னும் சிலர், தீதன்கூடல் அரசு மற்றும் வீதி (பிரதேச சபை) ; மேற்கு: வீதி (பிரதேச சபை) நொச்சிக்காடு இலங்கை மின்சார சபை மற்றும் தீதன்கூடல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.

10-755

1A – G33037– 35(2020/10)

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) பிரிவின் கீழான கட்டளை*

**2020 ஆம் ஆண்டின் 155 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/9/2017/WS/146.
பிர. செ. குறிப்பு இல. : KDS/UNU/4/6/LA/63/2016.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, செத்தெம்பர் 29.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், உடுநுவர.

2. **காணியின் விபரம்**: மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவில், கந்துபலாத்த கோறளே (உடுநுவர) சிறுபிரிவில், பெலும்கல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் 2018.04.23 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபட இல. Maha/UDN/2017/679 இல் குறிப்பிடப்பட்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'A' – பெலும்கல வத்தை - விஸ்தீரணம் : சுமார் 0.0036 ஹெக்டயார்**

வடக்கு : வீதி மற்றும் இக் காணியின் எஞ்சிய பகுதி ; கிழக்கு: இக் காணியின் எஞ்சிய பகுதி; தெற்கு: துண்டு B மற்றும் இக்காணியின் எஞ்சிய பகுதி ; மேற்கு: இக்காணியின் எஞ்சிய பகுதி மற்றும் வீதி.

02. **துண்டு 'B' – பெலும்கல வத்தை - விஸ்தீரணம் : சுமார் 0.0271 ஹெக்டயார்**

வடக்கு : இக் காணியின் எஞ்சிய பகுதி மற்றும் துண்டு A; கிழக்கு: இக் காணியின் எஞ்சிய பகுதி; தெற்கு: இக்காணியின் எஞ்சிய பகுதி ; மேற்கு: இக்காணியின் எஞ்சிய பகுதி.

10-756